**தலைப்பு 187 – முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தலைப்பு 187 – முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நீர் வழங்கல் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 25 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 23 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நீர் வழங்கல் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின்

செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) மூலதனச் செலவினங்கள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய மூலதனச் செலவினங்களை கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ACA-C மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டுள்ள காசு பாய்ச்சல் கூற்றினுள் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசு பாய்ச்சலாக ஒவ்வொரு செலவின தலைப்பிற்கும் உரிய ரூபாய்.411,378 பெறுமதியான மிகை கட்டண மீதி ஒன்று தனியாக மிகை கட்டணமாக இனங்காணப்பட்டிருந்தது. | அப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் இணங்குவதுடன் மிகை கட்டணமாக குறிப்பிடப்பட்டுள்ள ரூபாய்.411,378 ஆன தொகை எமது செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்படும் மிகை கட்டணம் ஆவதுடன் தவறுதலாக அது காசு பாய்ச்சல் கூற்றில் மிகை கட்டணமாக குறிப்பிடப்பட்டுள்ளமை. | செலவினங்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டு காசு காய்ச்சல் கூற.றினுள் காண்பிக்கப்பட வேண்டும். |

#### (ஆ) கொடுக்கல் வாங்கல்களை முடிவுறுத்தும் முற்பணக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சினால் பல்வேறு பணிகளுக்காக வெளியிடப்படும் ஒவ்வொரு உபகட்டு நிதியினதும் செலவிடப்படாத மீள தீர்க்கப்பட்டுள்ள தொகை குறித்த தொகையின் 50 சதவீதத்தை விஞ்சியுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டமையால் உபகட்டுநிதிகளை வழங்கும் போது சரியான மதிப்பீடொன்றினை மேற்கொள்ளாது பணம் முறையற்ற பாவனைக்கு | பல்வேறு பணிகளுக்காக உபகட்டுநிதியை பெற்றுக்கொள்ளும் போது சரியான மதிப்பீடு ஒன்று அல்லாது கட்டுநிதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் பல்வேறு பணிகளுக்காக உபகட்டு நிதி பெற்றுக்கொள்ளும் போது சரியான மதிப்பீடுகளை மேற்கொண்டு கட்டு நிதிகளாக பெற்றுக்கொள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை | சரியான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| உட்படுத்தப்படுகின்றமை தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது. | வழங்கப்பட்டுள்ளமை. |

**(இ) வைப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களுக்கு உரிய வைப்புக்களை செலுத்தல் மற்றும் மீதிகளை கணக்கு வைக்கும் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ACA-4 மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டுள்ள 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக வைப்புக் கணக்குகள் தொடர்பிலான கூற்றில் 2022 ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளபடியான மீதியாக ரூபாய்.912,678 இனங்காணப்பட்டிருந்தது. அரச பாதுகாப்பு மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் உள்ளக விவகாரப் பிரிவு 2022 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் புதிய அமைச்சொன்றாக இவி அமைச்சில் நிறுவப்பட்டுள்ளமையால் பழைய அமைச்சுக்குரிய ரூபாய்.912,678 தொகையான வைப்பு மீதி ஒன்று இந்த அமைச்சின் ஆரம்ப மீதியாக இனங்காணப்பட்டுள்ள போதிலும் அது வைப்பப் பெறுவனவு ஒன்றாக திறைசேரிப் புத்தகங்களில் இனங்காணப்பட்டிருந்தது. அதனால் ACA-F மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டுள்ள நிதி செயலாற்றல் கூற்றின் வருமானம் அல்லாத பெறுவனவுகளாக இனங்காணப்பட்டுள்ள வைப்புப் பெறுவனவுகள் ரூபாய்.912,678 இனால் குறைத்து உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும் ACA-F | ஏற்றுக்கொள்கின்றேன்.<br><br>2022 செப்டம்பர் 30 ஆம் திகதியின் பின்னர் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டமையின் அடிப்படையில் கணக்குகளின் ஆரம்ப மீதிகளுக்கு மாற்றும் போது பொதுவைப்பு கணக்கின் மீதி அமைச்சின் புத்தகங்களின் ஆரம்ப மீதியாகவும் பேரேட்டு பதிவுகளுக்கு இடும்போது வரவு மற்றும் செலவாக சமர்ப்பிக்கப்பட்டமையால் தவறொன்று இடம் பெற்றுள்ளது. எனினும் இறுதி மீதியில் மாற்றம் ஒன்று காணப்படாததுடன் 2023 ஆம் ஆண்டு முதல் சரியாக கணக்குகள் பேணிச் செல்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் ACA-F மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டுள்ள நிதி செயலாற்றல் கூற்றும் பொதுவைப்பு கணக்குகளுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்களின் தவறாக குறித்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | மாதிரிகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டுள்ள கட்டுநிதி இணக்க கூற்றும் அந்த பெறுமதியால் மிகை கணிப்பீட்டிற்கு உள்ளாகியிருந்தது.

**(ஈ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

அமைச்சினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நி.பி.891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிணைகள் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு பேணப்பட்டிருக்கவில்லை. | நி.பி.891(1) இன் பிரகாரம் பிணைகள் பதிவேடொன்றினை பேணுவதற்கு உரிய பணிகள் முன்னெடுக்கப்படுகின்றமை. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். |
| (ii) | அங்கீகரிக்கப்பட்ட கடன் பதிவேடு (சீ.சீ.10), அங்கீகரிக்கப்பட்ட பதிவேடு பேணிச் செல்லப்பட வேண்டிய அறிவுரைகளுக்கமைய பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட கடன் பதிவேட்டினை பேணி செல்ல வேண்டிய அறிவுறுத்தல்களுக்கு அமைய பேணுவதற்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளமை. | அங்கீகரிக்கப்பட்ட கடன் பதிவேட்டினை பேணிச் செல்ல வேண்டிய அறிவுரைகளுக்கமைய பேணப்பட வேண்டும். |
| (iii) | மேலதிக நேரக் கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கப்பட்ட உரிய மாதிரிகளுக்கமைய மேலதிக நேர பணிகள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | மேலதிக நேரத்திற்கு உரிய முறையில் உரிய மாதிரிகளுக்கமைய பதிவேடொன்று பேணிச் செல்லப்படுவதாக அறிவுரை வழங்கப்பட்டுள்ளமை. | உரிய மாதிரிகளுக்கமைய மேலதிக நேர பணிகள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | கடன் கட்டுப்பாட்டு கணக்கு ஒன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | கடன் கட்டுப்பாட்டு கணக்கிற்கான பதிவேடொன்று பேணிச் செல்லப்படுவதாக அறிவுரை வழங்கப்பட்டுள்ளமை. | கடன் கட்டுப்பாட்டு கணக்கு ஒன்று பேணிச் செல்லப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளது.

| அவதானிப்பு | | | |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| (அ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதி கோவை | | | |
| பொது நிர்வாக உள்நாட்டு அலுவலகங்கள் பெருந்தோட்ட மற்றும் பாராளுமன்ற அலுவலகல் அமைச்சின் செயலாளரினால் 1997 பெப்ரவரி 03 ஆம் திகதி வெளியிடப்பட்ட 8/97 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 7.1 ஆம் பிரிவு | மேலதிக நேரப் பணிகளை செலுத்துதல் மாதம் ஒன்றிற்கு 20 மணித்தியாலங்கள் எனும் உச்ச எல்லையை கொண்டிருக்க வேண்டிய போதிலும் 4 பதவிகளுக்காக பின்வருமாறு 20 மணித்தியால மேலதிகநேர எல்லையினை விஞ்சி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த ஒவ்வொரு பதவிகளுக்கும் விஞ்சிய மேலதிகநேர மணித்தியாலங்களின் கணிப்பீட்டுக்கு மீளாய்வாண்டிற்குரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஒரு மாதத்திற்குரிய மேலதிக நேர மணித்தியாலங்களின் எண்ணிக்கை அ.உ.உ மற்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்காக 100 | மேலதிக நேரக் கொடுப்பனவுகள் தொடர்பில் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 19 இன் பிரகாரம் பதிவேடுகளை தயாரித்தல் மற்றும் உரிய அங்கீகாரங்களை பெற்றுக்கொள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளமை. | சுற்றறிக்கைக்கமைய செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மணித்தியாலங்கள் படியாகவும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு 80 மணித்தியாலங்கள் படியாகவும் சாரதிகளுக்கு 150 மணித்தியாலங்கள் எனுமாறும் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாண கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 315 | கணக்கிட்டு உத்தியோகத்தர்களாக ஒவ்வொரு திணைக்களத்தின் தலைவரினாலும் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களினால் பிணை வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பொறுப்பாக செயற்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளமை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 756(6) | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்படும் காலச்சட்டகத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடங்களில் பொருள் மெய்மையாய்வு மற்றும் அறிக்கையிடல் பணிகளுக்குரிய சுற்றறிக்கைகளுக்கு அமைய உரிய காலப்பகுதியினுள் அனைத்து பணிகளையும் மேற்கொள்ளுமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்படும் என்பது. | நிதிப் பிரமாணத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 880 | நிதி, வருமான முத்திரை அல்லது பொருட்களை பொறுப்பேற்றல் மற்றும் தம்வசம் வைத்திருத்தல், அவ்வாறல்லாதுவிடின் அரசின் நிதியினை பகிர்ந்தளித்தல் அல்லது | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளமை | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முத்திரை இல்லாதுவிடின் பொருட்களை விநியோகித்தல் தொடர்பில் நிர்வாக ரீதியாக பொறுப்புக் கூற வேண்டிய அல்லது அதிகார கையளிப்பின் கீழ் அப்பணி கையளிக்கப்பட்டுள்ள அல்லது உத்தியோகத்தர்களும் அரச கணக்குகளுக்கு உரிய உறுதிச் சீட்டுக்களை சான்றுபடுத்தும், காசோலைகளில் கையொப்பம் இடுபவர்களும் 612 ஆம் அதிகாரத்தின் அரச உத்தியோகத்தர்களின் பிணைகள் கட்டளைகளுக்கு அமைய பிணை வைத்திருக்கவில்லை. | ம. | |
| (iv) | நிதிப் பிரமாணம் 881 | பிணை வைக்க வேண்டிய பதவியொன்றின் உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்கும் போது அல்லது அவ்வாறானதொரு பதவிக்கு இடமாற்றம் செய்யும் போது அவ் உத்தியோகத்தினால் அப்பதவியில் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது இடமாற்றம் பெற்ற திகதியிலிருந்து இரு மாத காலப்பகுதியினுள் பிணை வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான பதவிகளில் சேவையாற்றும் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் யார் என்பது இனங்காணப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | மேற்படி |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 03 மற்றும் 04 ஆம் பந்திகளுக்கு அமைய 2022 ஆம் ஆண்டுக்கான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். 2023 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளமை. | சுற்றறிக்கைக்கமைய செயற்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022/06 வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளுக்கமைய அரச பாதுகாப்பு அமைச்சின் தலைப்பு (442) இன் கீழ் உள்ள ரூபாய்.56,116,974 பெறுமதியான 187 சொத்துக்கள் புதிய தலைப்பிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் புதிய அமைச்சின் சொத்துக்கள் CIGAS நிகழ்ச்சி திட்டத்திற்கு உள்ளடக்கும் போது புதிய மதிப்பீட்டு பெறுமதியாக ரூபாய்.61,460,914 உள்ளடக்கப்பட்டிருந்தது. 01/2020 அரச நிதி சுற்றறிக்கையின் II ஆம் பகுதியில் 8.1.5 ஆம் பிரிவிற்கமைய அவ்வாறு சுவீகரிக்கப்பட்ட சொத்துக்களின் புத்தகப் பெறுமதி மற்றும் மதிப்பீட்டு பெறுமதி ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடு ரூபாய்.2,649,140 உரிய அங்கீகாரமின்றி | அரச பாதுகாப்பு மற்றும் இடர் முகாமைத்துவம் இராஜாங்க அமைச்சின் CIGAS நிகழ்ச்சி திட்டத்தில் உள்ளடக்கப்படும் இரட்டை கணிப்பீட்டிற்கு உட்பட்ட மாற்றல் பத்திரம் ஆகும். அதனை திருத்துதல் கடினமானது என்பதால் அனைத்து சொத்துக்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டமை. | சுற்றறிக்கைக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்குகளுக்கு உள்ளடக்கப்பட்டு இருந்தது. | | |
| (ஆ) | இவ்வாறு இனங்காணப்பட்ட புதிய மூலதன சொத்துக்களினுள் ரூபாய்.2,694,800 பெறுமதியான சொத்துக்கள் எதுவித அங்கீகாரமும் இன்றி அமைச்சின் சொத்துக்களாக இனங்காணப்பட்டிருந்தது. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் அரச பாதுகாப்பு பிரிவிற்கும் அதற்குரிய நிறுவனங்களுக்கும் எம்மால் கணக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியினுள் கொள்வனவு செய்யப்பட்டு சாட்டப்பட்ட சொத்துக்கள் ஆகும். | உரிய அங்கீகாரத்தின் கீழ் சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | அமைச்சுக்கு சொந்தமான 2004 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட / சுவீகரிக்கப்பட்ட வாகனம் ஒன்றும், 2007 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு / சுவீகரிக்கப்பட்ட 03 வாகனங்களும், 2011 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட / சுவீகரிக்கப்பட்ட 04 வாகனங்களும், 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட / சுவீகரிக்கப்பட்ட பஜாஜ் மோட்டார் சைக்கிள் ஒன்றும் எனுமாறு 09 வாகனங்கள் காணப்பட்டதுடன் அமைச்சு ஆரம்பிக்கப்பட்டு 06 மாதங்கள் கடந்து இருந்த போதிலும் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் அமைச்சரின் பதவியணிக்காக நிதி அமைச்சினால் தற்காலிக அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள 05 வாகனங்கள் பயன்பாட்டில் காணப்படுவதுடன் அது தொடர்பில் கொன்ரோலர் நாயகத்திடம் விசாரித்து நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்வதற்கு அல்லது மீள ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய கொன்ரோலர் நாயகத்தினால் சொத்துக்கள் | அமைச்சுக்கு சொந்தமான வாகனங்களின் பதிவு, உரித்தினை மாற்றுதல் மற்றும் அமைச்சரின் பதவியணிக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களுக்கு உரிய அமைச்சுக்கு சாட்டுவதற்கு உரிய சுற்றறிக்கைகளுக்கு அமைய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை. | சுற்றறிக்கைக்கமைய செயற்பட வேண்டும். |

தொடர்பில் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளுக்கு முரணாக சொத்துக்களை தம்வசம் வைத்திருப்பதாக கணக்காய்வுக்கு அவதானிக்கப்பட்டது.

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 133 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரி சட்டத்தின் 40 ஆம் பிரிவிற்கு அமைய 2022 ஆம் ஆண்டிற்கான அமைச்சினால் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு உள்ளக கணக்காய்வு அலகொன்று நிறுவப்பட்டு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டு முதல் உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமித்தல் இடம்பெற்றிராத போதிலும் புதிய உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தரின் கீழ் 2023 ஆம் ஆண்டில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் மற்றும் தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41 ஆம் பிரிவிற்கமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஒன்று நியமிக்கப்பட்டு கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் கணக்காய்வு முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட்டது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதற்கமைய மீளாய்வாண்டின் போது சிரேஷ்ட மட்டத்திலான 03 வெற்றிடங்களும் மூன்றாம் மற்றும் இரண்டாம் மட்டத்திலான 08 வெற்றிடங்களும் ஆரம்ப மட்டத்திலான 06 வெற்றிடங்கள் எனுமாறு 17 வெற்றிடங்கள் நிலவின. | முதலீட்டு அபிவிருத்தி அமைச்சு 2022 அக்டோபர் 01 ஆம் திகதி நிறுவப்பட்டது. 2022/06 ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் 442 அரச பாதுகாப்பு மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சின் உள்ளக அலுவலக நிகழ்ச்சித் திட்டம் 187 செலவின தலைப்பான முதலீட்டு மேம்படுத்தல் அமைச்சின் நிகழ்ச்சி திட்டத்திற்கு உள்ளடக்கியமை மூலம் மற்றும் அந்த பிரிவிற்கு இணைப்பு செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் பதவியணியாக கருதப்பட்டது. | முறையான கற்கை ஒன்றின் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் முறையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2023 ஜனவரி 24 ஆம் திகதி புதிய பதவிகளை உருவாக்குதல் மற்றும் வெற்றிடங்களை நிரப்புதல் எனும் கடிதத்தின் மூலம் மேற்படி அரச பாதுகாப்பு மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் உள்ளக விவகார பிரிவின் பதவியணியை உள்ளடக்கி முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சிற்காக 21 பதவிகளுக்கு உரிய பதவியணிக்கு 72 எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் கீழ் பிரதேச செயலகங்கள் 305 இல் சேவையில் ஈடுபட்டிருந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இவ் | ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைமை அலுவலகத்தில் மற்றும் 04 உப அலுவலகங்கள் மற்றும் நாடு முழுவதும் உள்ள பிரதேச செயலகங்களுக்கு இணைப்பு செய்யப்பட்ட மத்திய அரசில் சம்பளம் பெறும் 305 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டு அமைச்சின் மொத்த பதவியணிக்காக அங்கீகாரம் 2023.01.31 ஆம் திகதி MIP/02/13/EDB/20 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் கோரப்பட்டுள்ளது. | மேற்படி |

அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு கணக்காய்வு திகதி வரையிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.